[1986 ஏப்ரல் 25

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்டிருக்கிற தகவல்களைப் பொறுத்தவரையில் கேரளத்திலே அந்த நிறுவனம் வியாபார ரீதியில் வெற்றி பெற இயலாத காரணத்தால் தான் மூடப்பட்டிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. அந்தப் படிப்பினையைத்தான் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, முந்திரியின் விலை நிர்ணயம் என்பது உள்நாட்டிலே செய்யப் படுவதில்லை. வெளிநாட்டிற்குத்தான் நாம் பெரும்பாலும் ஏற்றுமதி செய்கிறோம். ஆகவே வெளிநாட்டிலே நிலவக் கூடிய அந்த விலை நிர்ணயம் பொறுத்துத்தான் இங்கே விலை நிர்ணயம் செய்யக்கூடிய் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே தான் அப்படிப் பட்ட ஒரு வளர்ச்சிக்கு கழகத்தால் பயன் இல்லை என்று அரசு கருதுகிறது.

குடிநீர் வடிகால் வாரியம்.

560—வினா எண். 4460—திரு. கெ. வெங்கடாசலம் : திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நான்கு வட்டாரங்களாக பிரித்து திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலைமையகமாகக் கொண்டு செயல்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலூரைத் தலைமையகமாகக் கொண்ட வட்டாரத்திற்கு சென்னையிலேயே தலைமையகத்தை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) : மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு தெற்கு மண்டலம் 15—9—1985 முதல் செயல்பட்டு வருகிறது. திருச்சியைத் தலைமையகமாகக் கொண்டு மத்திய மண்டலமும், கோயம்புத்தூரை தலைமையகமாகக் கொண்டு மேற்குமண்டலமும், வேலூரைத் தலைமையகமாகக் கொண்டு வடக்கு மண்டலமும் 1986 ஏப்ரல் மாதம் முதல், செயல்பட குடிநீர் வடிகால் வாரியம் ஏற்பாடுகள் செய்துள்ளது. வேலூருக்குப் பதிலாக சென்னையை தலைமையகமாக ஏற்படுத்தும் கருத்து இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 4 வட்டாரங்களாகப் பிரிப்பதனால் தற்போது என்னென்ன மாற்றங்கள், திட்டங்கள் வரப் போகின்றன ? அதனால் அரசுக்கு என்ன செலவு ஆகிறது ? மேலும் அப்படிப் பிரித்ததன் காரணமாக சென்னை தலைமை அலுவலகத்தில் பணிபுரிந்த அரசு ஊழியர்களை அவர்களுடைய

1986 ஏப்ரல் 25]

விருப்பத்திற்கு மாறாக மதுரை, திருச்சி, வேலூர் போன்ற இடங்களுக்கு மாற்றப்படுவதன் காரணமாக பல தாய்மார்கள் தங்கள் கணவரை பிரிந்தும், குழந்தைகளைப் பிரிந்தும் துன்பத்தில் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதைப்போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, குடிநீர் வழங்கும் பணிகள் சிறப்பான வகையிலே செய்யப்பட வேண்டுமானால், ஆட்சியின் அதிகாரங்கள், நிர்வாக அமைப்புகள் பரவலாக்கப்படுவது தேவை என்ற வகையில்தான், முடிவு செய்து அந்த மாற்றம் செய்திருக்கிறோம். இதிலே எவ்வளவு செலவு ஆகிறது என்பதே பிரச்னை இல்லை. ஆனால் அதிலே பணியாற்றக்கூடிய அலுவலர்களுடைய குறைகளை நாம் மனிதாபிமானத்தோடு ஏற்றுத்தான், கடந்த ஆண்டே இந்த திட்டம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுடைய விருப்பத்தை ஏற்றுத்தான், இந்த நேரத்திலே அதை செயல்படுத்துகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரைத் தலைமையகமாகச் செய்ததால் சேலம், தர்மபுரி மாவட்டத்து மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அவ்வாறு இருப்பது அம்மக்களின் விருப்பத்திற்கு எதிராக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது, ஆகவே, அந்த அடிப்படையிலும், வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்கள் சென்னைக்கு அருகே இருப்பதால், போக்குரவத்து வசதி அதிகமாக இருக்கிற காரணத்தால், வேலூரில் உள்ள தலைமையகத்தை சென்னைக்கு மாற்ற அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதனால் பாதிப்பு எதுவும் இல்லை. மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண். 6 மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க முன்னமேயே எடுத்துக்கொள்ளப் பெறுகிறது.

புதுக்கோட்டை நகருக்குக் குடிநீர் வழங்குதல்.

(குறுகியகால வினா. எண். 6*வினா— எண். 9113)—

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகருக்கு, காவேரி உபரிநீரை குடிநீராக்க, தமிழக அரசு சுமார் 11.00 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது உண்மையா ?